22nd January 1964]

ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் மத்திய அரசாங்க உத்தியோகத்திற்கு போகிறபோது நம் மாணவர்கள் ஒரு ஆண்டு பின் தங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அதற்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நம் மாநிலம் பொறுத்தவரை முதலில் பள்ளியில் 5 வயதில் சேருகிறார்கள். பதினொன்று ஆண்டுகள் என்று சொல்லும்போது 16 வயதுதான் பூர்த்தி ஆகிறது. அதற்கு முன்பே உத்தியோகத்தை எதிர்பார்த்தால் அது சரி அல்ல.

திரு. செ. மாதவன்: இந்தியா முழுமையிலும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் இந்தியை கட்டாய பாடமாக்க வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சர் நம் அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருக்கிறார்களா? அதுபற்றி நம் அரசாங்கத்தின் கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்த அரசாங்கத்திற்கு இப்போது ஒன்றும் யோசனை வரவில்லை. பின்னால் கவர்னர் உரை மீதுள்ள விவாதத்திற்கு பதில் அளிக்கும்போது இதுபற்றி மேலும் குறிப்பிடுகிறேன்.

காந்தி கிராமத்திற்கு இந்தியப் பிரதமர் வருகை.

***62 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இந்தியப் பிரதமர் உயர்திரு ஜவஹர்லால் நேரு அவர்கள் 1963 டிசம்பர் மாதம் காந்தி கிராமத்திற்கு வந்ததையொட்டி மாநில அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The information asked for is not readily available. The time and labour involved in gathering the details for answering the question will not be commensurate with the public interest sought to be served.

திரு. செ. மாதவன்: பண்டித நேரு அவர்களின் உடல்நிலை பற்றி பலவித வதந்திகள் நாட்டில் உலாவிவருவதால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் அதுபற்றி இங்கு ஒரு அறிக்கை வைக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நேற்றுகூட நம் பிரதம மந்திரி அவர்களின் புதல்வியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அவர்கள் சுகமாக இருக்கிறார்கள், நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்று வந்திருக்கிறது. அதை மகிழ்ச்சியுடன் நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களுக்கு அரிசி விற்பனை.

***63 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசி விற்பனைக்காக மார்க்கெட் தேடும் பொருட்டு அண்டை மாநிலங்களுக்கு அரசாங்கம் அதிகாரியொருவரை அனுப்பியது உண்மையா?

[22nd January 1964

(இ) எவ்வளவு அரிசி உபரியாக விற்பனைக்கு உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) It is anticipated that at the end of the third plan period, Madras will have surplus rice which may have to be exported to other States. It has been considered desirable to have a survey made of the possibilities of marketing the rice grown in this State and also to find out whether there are any special varieties for which preference may be shown by people in the neighbouring States which can be grown in this State. The Government have accordingly sanctioned the deputation of one Assistant Marketing Officer to visit Kerala, Madhya Pradesh and Maharashtra States for a period of 3 months to make a study of the problem.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை: *தலைவர் அவர்களே, நமது மாகாணத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு அரிசி இப்பொழுது வருகின்றது. என்பதை அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அந்த புள்ளி விவரம் இப்போது என்னிடமில்லை. இப்போதுள்ள கேள்வி நம் மாநிலத்திலிருந்து அடுத்த மாநிலங்களுக்கு உபரியாக இருப்பதை விற்பதைப் பற்றியதுதான்.*

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை: *தலைவர் அவர்களே, இப்போது நம் மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு அரிசி அனுப்பப்படுகிறதே, அதன் அளவு என்ன என்பதை தெரிவிக்க முடியுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம்: *அதற்கான புள்ளிவிவரம் இப்போது என்னிடமில்லை. இரண்டு மூன்று லட்சம் டன் அனுப்பப்படுவதாகத் தெரிகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும்போது நமக்கு ஐந்து லட்சம் டன் அரிசி உபரியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அப்போது நாம் வெளி மாகாணத்திற்கு அனுப்ப வேண்டியதை அதிகமாக்குவதைப்பற்றி நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கும்.*

புலவர் கா. கோவிந்தன்: *தலைவர் அவர்களே, அரிசி நம்முடைய மாநிலத்திற்கு, வேற்று மாகாணங்களிலிருந்து வரவேண்டிய நிலைமை இருக்கும்போது, இப்போது நம்முடைய மாநிலத்திலிருந்து வேற்று மாநிலங்களுக்கு அனுப்பவேண்டியதன் அவசியம் என்ன ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *நம்முடைய மாநிலத்தில் நெல்லூர் அரிசி அதிகமாக வேண்டும் என்று கோருகிறார்கள். அது வெளியில் இருந்து வரவேண்டியிருக்கிறது. அதேபோன்று நாம் உற்பத்தி செய்யும் அரிசியை கேரளாவில் விரும்புகிறார்கள். ஆகவே அதை நாம் அவர்களுக்கு அனுப்புகிறோம்.*

திரு. மீ. கலியாணசுந்தரம் : *ஸார், நம்முடைய ராஜ்யத்திலிருந்து கேரளாவுக்கு போகக்கூடிய அரிசி, தொன்றுதொட்டு இருந்து கொண்டு வருகிறது. நம்முடைய விவசாய முறை*

இப்போது இருப்பதுபோல் இருக்கும்வரை இப்படித்தான் அனுப்பிக்கொண்டிருக்க வேண்டியிருக்கும். நம்முடைய ராஜ்யத்தில் உபரியாகிவிட்டது என்ற காரணத்தினுல் வெளியே அனுப்புவதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படியானுல் நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று அர்த்தமா, அப்படியானுல் ஏன் தான்யங்களின் விலை குறையவில்லை? அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்போதுள்ள உற்பத்தியும் போதாதுதான். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறும்போது ஐந்து லட்சம் டன் உபரியாக இருக்கும் என்று நான் சொன்னேன். இப்போது வேண்டிய அளவுக்கு உற்பத்தியாகவில்லை. இதைப்பற்றி நான் பதிலளிக்கும்போது விரிவாக சொல்லுகின்றேன். இப்போதுள்ள உற்பத்தியும் போதாது. உற்பத்தியை அதிகமாக பெருக்கினுல்தான் தான்யங்களின் விலை நிரந்தரமாக நிற்க முடியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கேரளாவுக்கு அனுப்பப்படும் அரிசி பண்டமாற்று முறையிலா அல்லது பண்டமாற்று முறையிலா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சாதாரண வியாபார முறையில் தான் விற்கப்படுகிறது.

Vigilance Commission for the State

* 64 Q.—SRI P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether the State Government propose to set up a Vigilance Commission as done by the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The matter is under the consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸார், இந்தக் கமிஷனுடைய அமைப்பு எப்படியிருக்கும், இதனுடைய அலுவல்கள் எப்படியிருக்கும், இதைப்பற்றி அரசாங்கத்தின் ஆலோசனைகள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இவையெல்லாம் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஆலோசனையில் என்ன இருக்கிறது என்பதையாவது சொல்லமுடியாதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மத்திய அரசாங்கம் இதற்கென்று ஒரு குழு அமைப்பதாக முடிவு செய்திருக்கிறது. அதே மாதிரி ஒரு குழுவை இங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிதான் அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.